# மல்ட்டிமீடியா + கல்வி கற்றுவித்தல் = எதிர்கால கல்வியியல்

தி. மணி <manisamu@hotmail.com>
மற்றும்
அ. இராசகோபலன் <rajagopalan43@hotmail.com>
சென்னைப் பல்கலைக் கழகம், சேப்பாக்கம், சென்னை - 600 005, இந்தியா

---

சுருக்கம்

எல்லோருக்கும் கணிப் பொறி (அ) கம்ப்யூட்டர் என்ன என்பது தெரிந்துவிட்டது! இது பொதுவான கல்வியறிவைக் காட்டுகிறது. எதிர்கால நடவடிக்கைகள் எல்லாமே கணிப்பொறியின் துணை கொண்டுதான் நிகழ்த்தவேண்டும் என்ற கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளோம். "மல்ட்டிமீடியா" தற்போறு கணிணி யுகத்தின் மிகச்சிறந்த தகவல் தளமாக விளங்குகிறது. "ஒரு படம் ஆயிரம் வார்த்தைக்கு சமம்" என்பதை அறிவுபூர்வமாக உணர வைத்துள்ளது "மல்ட்டிமீடியா".

வெறும் புரோகிராம்களையும், டெக்ஸ்ட்டுகளையும். எழுத்து நியூமரல்களையும் பேக்கேஜ்களையும் புகுத்தி வெவ்வேறு துறை உபயோகத்திற்கேறப கணிப்பொறியியன் பயன்பாடு வளர்ந்து வந்திருக்கிறது. தொடக்கப்பள்ளியின் ஆரம்ப கல்விப் பாடத்தில், படத்தைப் பார்த்து கதை சொல்லும் கல்வி முறையை கம்ப்யூட்டரில் புகுத்தி மல்ட்டிமீடியாக்கியிருக்கிறார்கள். முன்னது ஊமைப்படம், இது-உண்மைப்படம் (உண்மைப்பாடம்).

டெக்ஸ், ஆடியோ, வீடியோ, கிரபிக்ஸ் ஆகிய மீடியாக்களின் கலவை - மல்ட்டிமீடியா. இதனைத் தனித்தனியாக கண்டறிந்து கல்வி-கற்பித்தில், வணிகத்தில், சினிமாத்துறையில், விளம்பரத்தில் என்று இதன் பயன்பாட்டை நவீனப் படுத்தி நம் உள் மனதில் பதியவைத்தாலும், கல்வி கற்பித்தல் மல்ட்டிமீடியாவின் பங்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் இக்கட்டுரையின் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. நவீன கணிப் பொறியுகத்தில் பலப்பல இணையங்கள் புதிதாய் தோன்றி நம்மை வியக்கவைக்கும் சூழலில் "மல்ட்டிமீடியாவை" எந்த சூழலில் பயன்படுத்திக் கொள்ளும் தள்ளூற்றல் தகுதியை நிருபமை செய்ய முடிகிறது.